530

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 03

**EPU3338– ஆரம்ப நிறுவனங்கள், ஆரம்ப பாடசாலைகளை வடிவமைத்தல்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 17.02.2024 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. ஆரம்ப பாடசாலையில் முகாமைத்துவ செயன்முறை என்பதால் நீர் கருதுவது யாது?
2. "ஆரம்ப பாடசாலை ஆசிரியர் பிள்ளைகளை கணிப்பிடுவதற்கு கணிப்பீட்டு பதிவேடுகளை கட்டாயம் பேண வேண்டும்."
   மேற்கூறிய கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா? ஐந்து (05) காரணங்களை தருக.
3. முன்பள்ளி/ஆரம்பப் பாடசாலையில் பிள்ளைகளின் விருத்தியின் முக்கியத்துவம் பற்றி புரிந்து கொள்வதைப் பற்றி சுருக்கமாக விளக்குக.
4. ஆரம்ப பாடசாலை ஆசிரியரிடம் காணப்படும் தலைமைத்துவ பண்புகள் ஐந்தினை (05) குறிப்பிடுக.
5. பகல் நேர பராமரிப்பு உதவியாளரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் ஐந்தினை (05) பட்டியற்படுத்துக.
6. ஆரம்பப் பாடசாலையில் வெளியக விளையாட்டு செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது பெற்றுக் கொள்ளக் கூடிய அனுகூலங்கள் ஐந்தினை (05) குறிப்பிடுக.
7. தலைமைத்தவ பாணிகள் (Style) மூன்றினைக் (03) குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
8. "SMART" எனும் பதம் குறிப்பது என்ன?

**(05x08= 40 புள்ளிகள்)**

## பகுதி II

9. (i) ஆரம்பப் பிரிவு வகுப்பறையில் கற்றல் சூழல் என்பதால் நீர் கருதுவது யாது?

(05 புள்ளிகள்)

(ii) ஆரம்பப் பாடசாலை வகுப்பறையில் வினைதிறனுடைய வகையில் கற்றல் சூழலை எவ்வாறு ஒழுங்கமைக்க முடியுமென்பதைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

(iii) வினைதிறனான கற்றல் சூழலை ஆரம்ப பாடசாலை ஆசிரியரொருவர் ஒழுங்கமைக்கும் போது அவன்/அவள் கவனத்திற் கொள்ள வேண்டிய கடமைகளை பட்டியற்படுத்துக.

(08 புள்ளிகள்)

10. **(i)** **"**தலைமைத்துவம்" எனும் பதத்தினை வரையறுக்குக.

**(05 புள்ளிகள்)**

**(ii)** ஆரம்ப பாடசாலை அதிபரது கடமைகளை பட்டியற்படுத்துக.

**(05 புள்ளிகள்)**

**(iii)** வினைதிறனான முகாமைத்துவ ஆரம்ப பாடசாலை தலைமைத்துவ பண்புகளின் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

11. **(i)** ஆரம்ப பாடசாலையில் நிதிவளம் என்பதால் நீர் கருதுவது யாது?

**(05 புள்ளிகள்)**

**(ii)** நிதிவளங்கள் எவ்வாறு ஆரம்ப பாடசாலை வகுப்பறையின் தரத்தினை மேம்படுத்துகிறது? உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**(iii)** ஆரம்ப பாடசாலை நிதிவளங்களை உயர்த்துதல் ஆசிரியரது கடமையாகும்" இக்கூற்றினை ஏற்றுக் கொள்கிறீரா? இப்பதிலுக்கான காரணங்களைத் தருக.

**(08 புள்ளிகள்)**

12. **(i)** ஒழுக்க விருத்தியின் படிநிலைகளை சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**(ii)** ஆரம்ப பாடசாலையில் ஒழுக்கவிருத்தி ஏன் முக்கியத்துவமுடையது, உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**(iii)** ஒழுக்கவிருத்தி தொடர்பாக ஆரம்ப பாடசாலை ஆசிரியரின் பொறுப்புக்கள் பற்றி விமர்சிக்குக.

**(08 புள்ளிகள்)**

13. கீழ்வரும் விடயங்களில் எவையேனும் **இரண்டிற்கு** (02) சிறுகுறிப்பு வரைக.

**(i)** மாஸ்லோவின் தேவைக்கோட்பாடு

**(ii)** ஆரம்ப பாடசாலையில் தொடர்பாடல் முகாமைத்துவ வளங்கள்

**(iii)** ஆரம்ப வகுப்பறையில் கணிப்பீட்டு பதிவேடுகள்

**(iv)** இணைபாடவிதான செயற்பாடுகளின் அனுகூலங்கள்

**(10 x 2 = 20 புள்ளிகள்)**

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*